**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 30 ம் நாள்

**இடைநிலை மனு எண். 655/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 52/2018**

1. வீரம்மாள் (இறப்பு)
2. கோமதி.
3. ரவிச்சந்திரன்
4. வீரப்பன் .... மனுதாரர்கள்/வாதிகள்

**// எதிர் //**

ராதாகிருஷ்ணன் .... பிரதிவாதி/எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பொன்னுலிங்கம், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.K.சண்முகம், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரை என் பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கினை திருத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர் அசல் வழக்கில் வாதியின் வாரிசு. 3 மற்றும் 4 மனுதாரர்களும் வாரிசுகள் ஆவார்கள். வாதியால் பிரதிவாதி பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதியால் எதிர்வழக்காடப்பட்டு வந்து, வாதி

தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், வாதி வீரம்மாள் கடந்த 30.07.2021ம் தேதியன்று இறந்துவிட்டார். மேற்படி வாதியின் சட்டப்படியான வாரிசுகளாக சேர்ப்பதற்கு மனு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வாதி வீரம்மாள் இறப்பதற்கு முன் எழுதி வைத்துள்ள உயில்படி வாதியின் சட்டப்படியான வாரிசுகளான அவரது மகள் கோமதி, மகன்கள் ரவிச்சந்திரன் மற்றும் வீரப்பன் ஆகியோர்களை மேற்படி அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து கொள்ள மனு தாக்கல் செய்யப்பட்டு அது இடைநிலை மனு எண்.60/2024 என்று நம்பராகி கடந்த 30.09.2024ம் தேதியன்று சமூகம் நீதிமன்றத்தார் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் இடைநிலை மனுவில் குறுகிய மற்றும் நெடிய விலாச பட்டியலில் திருத்தம் செய்துக்கொண்டு மேற்படி இடைநிலை மனுவினை மேல் நடத்திக்கொள்ள வேண்டியது அவசியமாவும், நியாயமாகவும் இருக்கிறது. இல்லாதபட்சத்தில் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இன்னலும், இழப்பும் ஏற்படக்கூடியதாக இருக்கிறது என்று கூறி மனுவில் கண்டுள்ள விவரப்படி அசல் வழக்கினை திருத்திக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) <u>பிரதிவாதி/எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-</u>

மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனுவில் கண்ட சங்கதிகள் அனைத்தையும் இந்த பிரதிவாதி/எதிர்மனுதாரர் முற்றிலும் மறுத்தளிக்கிறார். உண்மை விவரங்களை மறைத்து பொய்யான உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கொண்டு இடைநிலை

மனு தாக்கல் செய்திருப்பது நிலை நிற்க தகுந்ததல்ல. உண்மை விவரங்களை மனுதாரர்/வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

முதல் மனுதாரர் R.வீரம்மாள் 30.07.2021ம் தேதியன்று இறந்துவிட்டார். அவருக்கு வாரிசுகள் 1. ராமராதாகிருஷ்ணன், 2. கோமதி, 3. ரவிச்சந்திரன், 4. ராஜலட்சுமி, 5. வீரப்பன் ஆகியோர் வாரிசுதாரர்கள் ஆவார்கள். இந்த உண்மையை மறைத்து ராதாகிருஷ்ணன், ராஜலட்சுமி ஆகிய பெயர்களை மறைத்து அவர்களை தவிர மற்றவர்கள் தான் வாரிசுகள் என கண்டிருப்பது முற்றிலும் மோசடியாகும்.

ஆகவே ராதாகிருஷ்ணன், ராஜலெட்சுமி ஆகியோரையும் வாரிசுகளாக வழக்கில் சேர்க்க வேண்டும். உயிலின் நம்பகத் தன்மை நிரூபிக்கப்படவில்லை. உயிலை வைத்து யார் யார் வாரிசு என முடிவு செய்ய இயலாது. மன்னார்குடி நகராட்சியில் கொடுக்கப்பட்டுள்ள இறந்துபோன R.வீரம்மாளின் இறப்பு சான்றிதழும், மன்னார்குடி தாசில்தார் கொடுத்த வாரிசு சான்றிதழும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆகையால் மேற்படி வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனுவை 60/2024 சரியான விபரங்களுடன் புதிய மனு தாக்கல் செய்யவும் விட்டுப்போன ராதாகிருஷ்ணன், ராஜலட்சுமி ஆகியோரையும் வாரிசுகள் என சேர்த்து எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரையை தாக்கல் செய்துள்ளர்.

**4) இம்மனுவானது அனுமதமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு</u> :-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது வாதி வீரம்மாள் இறந்துவிட்டதால் அவரது வாரிசுதாரர்களான மகள் கோமதி, மகன்கள் ரவிச்சந்திரன் மற்றும் வீரப்பன் ஆகியோரை வாரிசுதாரர்களாக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு இடைநிலை மனு எண்.60/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 30.09.2024 ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

**4.** மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்குரையில் திருத்தம் செய்து அசல் வழக்கை மேல் நடத்த அனுமதியளிக்க வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ள போதும், நீதியின் நலன் கருதி வழக்குரையில் திருத்தம் செய்வதற்கு மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவது இல்லை என்பதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6)** **முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்து-தட்டச்சரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (14.03.2025) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 30 ம் நாள்

**இடைநிலை மனு எண். 655/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 52/2018**

1. வீரம்மாள் (இறப்பு)

2. திருமதி. T.கோமதி, வயது 55, க/பெ.திருமேணி, த/பெ. ராமசாமி - வீரம்மாள், இந்து, வசிப்பிடம் எண்.18, இந்திரா நகர், மாளிகை மேடு, மன்னார்குடி நகரம், மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா.

3. திரு.R.ரவிச்சந்திரன், வயது 50, த/பெ.ராமசாமி, இந்து, வசிப்பிடம் எண்.71/2/22, வடுவூர் மெயின்ரோடு, பாமணி, மன்னார்குடி நகரம், மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா.

4. திரு.K.R.வீரப்பன், வயது 47, த/பெ.ராமசாமி, இந்து, வசிப்பிடம் எண்.71/3 ஏ, வடுவூர் மெயின்ரோடு, பாமணி, மன்னார்குடி நகரம், மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா.

.... மனுதாரர்கள்/வாதிகள்

// எதிர்//

திரு.ராதாகிருஷ்ணன், வயது 62, த/பெ.ராமசாமி, இந்து, வசிப்பிடம் நெடுவாக்கோட்டை கிராமம், மன்னார்குடி முன்சிப் மற்றும் தாலுக்கா.

.... பிரதிவாதி/எதிர்மனுதாரர்

இம்மனுவானது அசல் வழக்கினை திருத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 16.12.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 18.12.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பொன்னுலிங்கம், B.A., B.L., அவர்களும்,

எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.K.சண்முகம், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரை என் பரிசீலணையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.